உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவானைக்காப்
பதிற்றுப்பத்தந்தாதி.

சென்னை
தொண்டைமண்டலம் ஐஸ்கூல் ப்ரின்ஸிபல்
கூத்தூர் - வி - சுப்பையர் M. A., L. T.,
அவர்களியற்றியது.

இஃது
மஹாவித்வான் - புரசை
அஷ்டாவதானம் - சபாபதிமுதலியாரவர்கள்
மாணாக்கரும்
மேற்படி கல்விசாலைத்
தமிழ்த்தலைமைப்பண்டிதருமாகிய
திருமழிசை
வீரசிம்மாசனமடம்
ஸ்ரீலஸ்ரீ - சாந்தலிங்கஸ்வாமிகளாதீனம்
வித்வான் - சிவப்பிரகாசையரவர்களால்
பார்வையிடப்பட்டு

சென்னை
பண்டித மித்திர யந்திர சாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

1904வரு ஜூலைமீ 30உ

Registered Copy right.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவானைக்காப்

பதிற்றுப்பத்தந்தாதி.

(4(64)

சென்னை.

தொண்டைமண்டலம் ஐஸ்கூல் ப்ரின்ஸிபல்

கூத்தூர் - வி - சுப்பையர் M, A. L, T.

அவர்களியற்றியது,

இஃது,

மஹாவித்வான் - புரசை

அஷ்டாவதானம் - சபாபதிமுதலியாரவர்கள்

மாணாக்கரும்

மேற்படி கல்விச்சாலைத்

தமிழ்த்தலைமைப்பண்டிதருமாகிய

திருமழிசை

வீரசிம்மாசனமடம்

ஸ்ரீலஸ்ரீ - சாந்தலிங்கஸ்வாமிகளாதீனம்

வித்வான் - சிவப்பிரகாசையரவர்களால்

பார்வையிடப்பட்டு

சென்னை

பண்டித மித்திர யந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1904ஞு ஜூலை 30௳

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY.
TIRUVANMIYUR, MADRAS-41.

சாற்றுக்கவிகள்.

வித்வான் - காஞ்சீபுரம் - இராமசாமிநாயுடு

அவர்களியற்றியது.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

திருவளரு மைம்பூதத் தொருபூதத் தலத்திலுறை சிவபிரான்றன், மருவளருஞ் செங்கமல மலர்புரையுந் திருவடிக்கண் மாட்சி மேய, குருவளரும் பதிற்றுப்பத் தந்தாதிச் சொன்மாலை குலவச் சூட்டி, உருவளரும் புடவிமிசை யுயர்சீர்த்தி யுற்றனனி யொளிர்வுற் றானே. (க)

அன்னவன்யா ரெனிற்றொண்டை மண்டலத்துத் துளுவவேளாளர்பேரான், மன்னலுறும் போதகசாலையிற்பிரின்சிபாலெனுமுத் யோகம் வாய்ந்தோன், தன்னனைய நயசுகுணன் றமிழ்க்கடலை யெளிதிலுண்ட தளரா நாவோர், முன்னவனென் றேயுலகி லேவருமேத் தெடுக்கமிகு முதுசீருள்ளோன், (உ)

சிவனடியார்க் காணிலந்தச் சிவனென்றே கருதியவர்ச் சிறக்கப் பூசித், தவனமையின் றைப்பிறவி யறுக்கமுயல் வோனொரு மாசு தீர்ந்த, புவனமதி லிரவலர்க்கோர் புகலிடமா யிருப்பவன்மெய்ப் போத முற்றோன், தவநயக்கூத் தூர்வாழுய வேங்கடரா மையர்தரு தநய னென்போன். (௩)

ஆங்கிலபா ஷையிலுமுய ரற்புதமா நற்கவிஞ ராவரென்று, வாங்குதிரைக் கடலுலக ருரைத்திடுஞ்சான் சன்மில்டன் வருஷேக்ஸ்பியர், ஓங்குபுகழ்க் கோல்டிஸ்மித் தெனவெவரு முரைக்குமுறை யுற்றோன் சால்பு, தேங்குறு சீர்ச் சுப்பையனெனுநாமம் பூண்டென்றுந் திகழ்வோன் யாதோ,

சேந்தோம்காலேஜ் தமிழ்ப்பண்டிதர்,

நமயிலை - சண்முகம்பிள்ளையவர்களியற்றியது.

விண்ணோருங் குமிமாட நிலையோருங் கூத்தரின் மேவியோருக்கும், பண்ணோருங்கு முறையோருங்கு நாவோர்க்குஞ் சிறப்புடைய பனுவ லாயேன், கண்ணோருக்கு மணியனையான் சுப்பைய நாவலவன் றகைவுயோருக்கும், பெண்ணோருக்கும் பங்கனுக்குப் பதிற்றுப்பத் தந்தாதி பேசினானால்,

அஷ்டாவதானம்.
பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்
இயற்றியது.

கற்றுப்பத் தந்தாதி வருநீனோர் தனமுதரங் கன்னங் கண்கள், பெற்றுப்பத் தந்தாதி யிமிர்நல்லார் நடநாளும் பெயருங் காவை, யுற்றுப்பத் தந்தாதிக் குயரலங் காரசுவை யோங்க வோர்ப, திற்றுப்பத் தந்தாதி சுத்தூர்சுப் பையக கவிஞன் றெரித்திட் டானல்.

புரசை - அஷ்டாவதானம் - சபாபதிமுதலியாரவர்கள்,
மாணாக்கரிலொருவரும்
சென்னைச்சர்வகலாசங்கத்துத்
தலைமைப் பரிட்சகர்களி லொருவருமாகிய,
தண்டலம் - பாலசுந்தரமுதலியாரவர்கள்
இயற்றியவை.

மும்மறையு ணடுமறையி னந்தமறைக் குயிரெனவே மொழியா நிற்கும், எம்மையுடை யானமலை பங்குடையா னினிதாவீற் றிருக்குஞ் சோணுட், டம்மையுமிம் மையுமுதவும் பலதளிக டமிலழகார் காவைக்கன்றோன், செம்மைமலி யந்தாதி யின்மையினந் தாதியொன்று செப்பினானல்.

இனையனியா ரெனினறைதுஞ் சகோதரவாஞ் சையுமன்பு மென்று மேய்ந்தோன், புனைதருசீ ராங்கிலத்திற் சதுரனெனக் கூறுமெழிற் புலமை மிக்கோன், தனைநிகராந் தொண்டைமண் டலகலா சாலைக்குத் தலைமை யன்னும், வினையமுறும் நயப்போத காசிரியன் சுப்பைய மேதக்கோனே. உ.

அவனுரைத்த வந்தாதி கேட்டவழிச் செவியினுக்கு முடைவினோதச், சிவையினிக்கு நினைப்போர்கண் மனமினிக்கு மென்பராற் சில்லோ ரீண்டு, சுவையொன்பா னெடுபத்திச் சுவைசொட்டும் பான்மையினாற் றெடுநீர் வைப்பில், உவமையிலா வமுதென்கோ தேனென்பா லென்கோயா னைப்ப லம்மா!

சிவஞ்சத்தி தனைப்பிரியா தொருசத்தி சிவப்பிரியா தென்றுசெப்பும், தவஞ்செறியு மான்றோர்சொற் கியையவிறை யுமையுருவத் தானே கொண்டும், நவம்பொருந்து மிறையுருவ முமைகொண்டும் வீற்றிருக்கு நல்மே மேவும்,பவந்தணக்கும் காவைமகிழ் பரம்பொருளே யிவந்தாக்கும் பரிவின் மாதோ,"

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிறப்புப்பாயிரம்.

இஃது

மஹாவித்வான் - புரசை

அஷ்டாவதானம் - சபாபதிமுதலியாரவர்கள்

மாணாக்கருளொருவரும்

சென்னை, தொண்டைமண்டலம் ஹைஸ்கூல்

தமிழ்த் தலைமைப்பண்டிதருமாகிய

திருமழிசை

வீரசிம்மாசனமடம்

ஸ்ரீலஸ்ரீ - சாந்தலிங்கசுவாமிகளாதீனம்

வித்வான் - சிவப்பிரகாசையரவர்கள்

இயற்றியது.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சொல்லேறு திருத்தொண்டத் தொகையேறு மெய்
யடியார் தொகுப்பி னுற்பா, னில்லேறு மும்மையின ரினி
தேறு மேன்மையுறீஇ யிருசீர்ப் பொன்னிப், பல்லேறு கா
லேறிப் பாய்ந்தேறுங் கமலமலர்ப் பணைசூ லாவிச், செல்
லேறு பொழிற்புலியூர் சிரமேறு மகுடமெனத் திகழ்
சோ ணாட்டுள். (௧)

மறைமுழக்கு மறையவரம் மறைநவின்மா மனுநெறி
செய் மகமு ழக்குந், தறைமுழக்குந் திகழவியூண் டருமு
ழக்கும் பெறுமுழக்குந் தருக்கி னுண்ணு, மறைமுழக்கும்
வானவர்கண் மணமலர்தூ யாசிபுரி முழக்கு மோவா, நறை
முழக்கும் வயற்றிருவா னைக்காவின் மேவுமர னற்றாட் கன்
பின். (௨)

வானோங்கு தருவினங்கள் வளனோங்கு மஞ்சிறைய
வண்டர் மாந்தத், தானோங்கு நறைவழங்காத் தகையோங்கு
நவையொருவித் தம்போ லென்றுந், தேனோங்கு வகைதேற
லுந் திறத்தோங்கல் போனிவந்து தேறல் வாக்கும், கானோ
ங்கு வயற்றஞ்சைக் கடுத்தோங்குங் கூத்தூரிற் கவினுற்றோ
ங்கும். (௩)

மன்னுமறை யவருளரசர் மறைமுறையோன் வாதரா
யணப்பேர் மேய,தன்னிகர்கோத் திரனுபத் தப்பரூத் திரந்
தொழுகுந் தகைமை பூண்டோன், பன்னுசிவ சித்தாந்தப்
பற்றுறும காலிங்கப் பனவ னீன்ற,தன்னனிகர் வேங்கடரா
மையனெழிற் றவச்சுதனைங் கணைவே ளன்னான். (௪)

தோன்றிடினற் புகழோடு தோன்றுகெனச் சொற்ற
தமிழ்ச் சுருதிக் கேற்ப, வான்றவட கலையொடுதென் கலை
மட்டோ பலர்புகழு மாங்கி லத்து, மேன்றசம்பூ ரணனெ
னுஞ்சொற் கியைந்தபொருள் வாய்ந்திலகும் எம் - ஏ - பட்
டஞ், சான்றதிற லரசாங்கத் தவர்நல்கப் பெற்றிலகுந் தனி
ச்சீ ருற்றோன். (௫)

சங்கியற்றண் பணைச்சென்னைத் தொண்டைமண் டல
கலா சாலை தன்னிற், றங்குமுதன் மைப்போத காசிரியத்
தகைமருவிச் சற்சங் கங்க, ளெங்கெங்கும் பிரசங்க மினி
தாற்றி யெவரெவரு மின்பிற் பொற்பூ, விங்குமண முறில
தனை யேய்க்குமிவன் சீரெனவே யிசைப்ப நின்றோன். (௬)

புண்ணியநன் னீறக்க மணிவடமைந் தெழுத்திவையே
பொருளாக் கொண்டோன், திண்ணியலுஞ் சிவசரணர் த
மைச்சிவமாய் மதித்தொழுகுந் திறத்தின் மிக்கோன், மண்
ணியலும் புகழ்க்காந்தி மதிச்சரிதந் தமிழ்மொழியின் வரை
ந்த மாண்பன், தண்ணியநன் மாணவர்க டனைநிகர்ப்பப்
போதிக்குஞ் சக்தி யுற்றோன். (௭)

பன்னருமிப் புகழ்பரவு சுப்பைய நாவலனிப் பாரின்
மேவி, மன்னுதமிழ்ப் புலவர்மன மகிழ்ந்துசிரந் துளக்கியிறு
மாந்து நிற்பப், பொன்னகரப் புலவர்பெறு தேயாப்ப விரு
சுவையும் பொலிவி னோங்கத், துன்னரும்பத் தழகுநவ
ரசமுமலங் காரமுமே துதைந்து மல்க. (௮)

தலமலிதண் டமிழ்விருத்த யாப்பதனாற் பல்வேறு சந்
தமேய, நலமலியும் பதிற்றுப்பத் தந்தாதி யொன்றியற்றி
நன்க ணிந்தே, வலமலியிவ் வுடற்கொடுறு பெரும்பேறு
றனிவாய்ந்து வண்க ணுற்றும், புலமலிய வச்சியற்றிப் பற்பல
ர்க்கு முதவிமிகு புகழுற் றனல். (௯)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவானைக்காப்

பதிற்றுப்பத்தந்தாதி.

விநாயகர் துதி.

நேரிசைவெண்பா.

நந்தார் வயற்றிருவா னைக்காப் பதிற்றுப்பத்
தந்தாதி சொல்ல வருளும்பாற்—சிந்தார்
பணபதிமா லீசனயன் பண்டேத்து மாதிக்
கணபதிமா தண்டைக் கழல்.

சமயாசாரியஸ்தவம்.

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

வடமொழியிற் றென்மொழியே வலிமைத் தாய
வகைகாட்ட மறைக்காட்டம் மறையான் மூடுந்
தடமணிக்கோ புரக்கதவத் தாடி றப்பச்
சாத்தப்பைந் தமிழ்ப்பதிகஞ் சாற்றி னார்நீட்
டணியூராப் பணிப்பரமுன் றேழு னன்பிற்
பரவுமொரு புலியுநெடும் பாம்பு மேத்தத்
திடமணி யம்பலநடத்தன் கரத்தாழ் நீட்டைந்
இணைக்கொண்டு சொற்றவன்றன் சிரமேற் கொள்வாம்.

உ

இயற்றமிழ்ப்
போதகாசிரியர்வணக்கம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

திருவமலி பொழில்சுலவுந் திரிசிரபு ரத்தினிலெண்
டிசையோர் போற்றும்
பொருவரிய சர்வகலா சங்கத்திற் றமிழ்த்தலைமைப்
புலமை வாய்ந்தோன்
மருவெளியேற் கொண்டமிழி லக்கியவி லக்கணத்தின்
மாண்பு தேற்றும்
பருவமுகி லனையமுத்துச் சிதம்பரநா வலன்புகழைப்
பரவு வாமால்.

நூல்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கார்கொண்ட கடற்பருகுங் கடமுனிகைக் கமண்டலத்திற்
கவிழ்ந்துற் றூர்ந்த
நீர்கொண்ட வொருநதியே யிருநதியா வகந்தழுவ
நிலவா னைக்காப்
பேர்கொண்ட பெருநகரி லகிலாண்ட வல்லிதொழப்
பெரிது மேவுஞ்
சீர்கொண்ட வரன்சரணைச் சிந்திப்போர் வினையனைத்துஞ்
சிந்திப் போமால்.

சிந்திக்க வரமருளுந் திருவானைக் காவடிக
டினமு நெஞ்சே
வந்திக்க மலர்க்கரமும் வாழ்த்துபசர் தமிழ்வாக்கும்
வணங்க மெய்யும்

பந்திக்கத் தலையன்பும் பரிந்தளித்து மலன்மலர்த்தாட்
பரவா தந்தோ
நிந்திக்க வுடற்குழைக்கு நின்செய்கை விழற்கிறைத்த
நீர தன்றே. (௨)

நீரோங்கு மடவரலை நிதஞ்சுமப்போ னெனலறத்தன்
னிலைமைநீளப்
பாரோங்கு மழுதேசப் பதியினிலந் நீருருவாய்ப்
பயிலுங் கொன்றைத்
தாரோங்கு நெடுஞ்சடிலத் தற்பரனின் பொற்பமர்செந்
தாட்டுணைக்கே
சீரோங்கு திருத்தொண்டின் றிறனோங்க வருள்கவினை
தீர்தற் கின்றே. (௯)

தீர்த்தவடி வுற்றிலகுந் தீர்த்தனே செவ்வியநூற்
கிலம்பி முன்னை
யார்த்தசெழு மணிக்கோயி லமுதேசப் பெருமானே
யடியா ருள்ளச்
சீர்த்தவிசின் மேவியருள் சிற்பரனே யுனைப்பரவுஞ்
சிறிய னேனைப்
போர்த்தமல மிரித்தமலப் புனைகமலப் பதநிழலிற்
புகுவிப் பாயே (௪)

ஆயமறை யந்தமளந் தளந்தறியா வமலதிரு
வானைக் காவின்
மேயவினைப் பரவிமுழுஞ் சிலந்தியுமா மிவற்றொன்று
மேலை நற்பே
றேயமற்றொன் றிச்சகவாழ் வெய்தவரு ளியதென்சொ
லெவ்வுயிர்க்குந்
தாயனையா யுள்ளன்பிலரவெளியே னுணர்ந்துவினை
தணக்கு மாறே (௫)

தணக்கருமைந் தனைக்கிழவன் றனைச்சினவும் விகடவிழித்
தழற்கொ டென்றன்

கண்க்கருவெம் மலவிருட்கட் டறச்சினவி னின்சரண
　　　　கமல நீழன்
மணக்குறுமா றருள்புரிக கோச்செங்க ணன்முன்னர்
　　　　வணங்கிப் போற்ற
வெணற்கருநின் பதமுத்தி யீந்தொளிர்வெண் ணாவனிழ
　　　　லிருக்குந் தேவே. (௬)

தேவர்மணி முடியிடறுன் றிருவடிப்பேற் றினையிழையிச்
　　　　சிறியே னென்று
மூவர்திரு நெறித்தமிழும் முழுமணிவா சகன்முறையு
　　　　முறையிற் றேரே
னாவலிற்கண் மணிநீறு மணியகிலே லைந்தெழுத்தி
　　　　னடைவுந் தேரே
னாவலடி யமர்ந்தருளு நாயகனே யெங்ஙனுநா
　　　　னண்ணு கேனே. (௭)

நண்ணருமிப் பிறவியிடி னனுருவதெப் பிறவிகொலோ
　　　　நாயி னேற்கென்
றெண்ணிநினை தருட்கிடனும் வகையுளதற் றிளமானி
　　　　னெழிலோக் கன்ன
கண்ணியர்த மிடையகரங் கவின்றிலகுங் கல்வியினிற்
　　　　களிப்புற் றேற்கும்
புண்ணியர்க டொழுமுனடிப் போதருள்க பிரமேசப்
　　　　பொருவி லேசே. (௮)

பொருதுறுமோர் முநிவனுகர்க் குழிந்தரப்புற் பலரென்பிற்
　　　　புரள்வான் யாற்றி
னொருமுநிக்கு மண்டலமின் றெழிலியரன்பூ சனைக்குதவி
　　　　யுயரும் பொன்னி
மருவுதிரு வானைக்கா வானவனைக் கோதமன்போன்
　　　　மயலுற் றேத்தா
[illegible]
　　　　[illegible] (௯)

நன் றுமய னிருபிக்கக் கண்டகிடிட் படிந்தாழ்ந்து
நற்பொன் னிக்க
ணின்றெழுவி மானத்து நின்மலனே யயன்மாது
ரேடிக் காணு
வுன்றன்மரை மலரடிப்பே றுள்ளன்பி லாவெளியே
னுறுமா றெங்ங
னென்றணவும் பொழிற்சலவு மெழிலிலகு ஞானதலத்
திருக்குங் கோவே. (க௦)

எழுசீர்க்கழி நெடி லாசிரிய விருத்தம்.

இருக்காதி வேத முடிமீது மன்ப
ரிதயால யத்து முலவா
பெருக்காவை மேவு முகிமேனி வந்த
பெருநாவ லத்து மிளிரா
திருக்காலெ னாது சிரமே லிலங்கு
திறனுனி லத்து றவனே
லொருக்கா னுமா னுமயனுரு மென்று
முனும்வாழ் வுறப்பெ றுவனே. (கக)

பெறவேலி ரும்பு வரமென்று நின்றுட்
பெருழ்புண்ட ரீக மிதயத்
துறவேவி ழைந்து நிதமுன் றனிச்சீ
ருவந்தன்பி னோடு சிரமேன்
மறவாதி ரண்டு கரமோலி கொண்டு
வணங்காவெ னாது வினைவே
றறவேய ருள்க சிறையாரும் வண்ட
ரயரும் வெனுவன் மணியே (கஉ)
மணியாய் மணிக்கு ளொளியாய் மலர்க்குண்
மணமா யுரைக்கு ளுணர்வாய்
குணியாய் குணிக்க வரிதா குவித்த
கொலையார் மழுப்ப டையினேய்
பணிநு மெத்த வொருநா வைமுத்த
பதினா யிரத்த ருளுவாய்

அணியார் விடைக்கொ டியுனே மறைக்கு
மரியாய் தவத்த ரமுதே (௧௩)
தவஞான மீகை யருளோ டடக்கந்
தயை சாந்த மேது மிலனாய்
யவமேகு லாவு மகமே தருக்கி
யடியே னுயா தழிவனோ
சிவமேவி சாக சனகா மதர்த்த
சிறியேனை யாண்ட ருள்வையோ
பவமேவி ராய நெடுமால் பழிச்சு
பவனே வெணாவ லமுதே. (௧௪)

அமுதேச ஞான தலவாச தம்பி
யகிலாண்ட வல்லி யயன்மால்
குமுதேசன் பானு முநிகோத மன்வண்
குறுமாத வத்தன் முதலாஞ்
சமுதாய மான தவரால் வணங்கு
தலைவாமி குத்த வவரன்
பிழியேனு மின்றி யிறுமாந் திருக்கு
மெளியேனு முய்ய வருளே. (௧௫)

அருளேது மின்றி யன்பேது மின்றி
யறமேது மின்றி யறிவின்
தெருளேது மின்றி செந்தாளி றைஞ்சு
திறமேது மின்றி மகளிர்
மருளேது வன்றி மனமே கவன்று
வளர்வேனு முன்ற னுயரன்
பருளே யடைந்து னடியே வணங்க
வருள்வாய் வெணாவ னிலையே. (௧௬)

நிலையாத வாழ்வு நிலையாத நாடி
நிதமே யலைந்து திரிவேன்
கலைமாறு சிதமதிகுடி நீடு
கவினார் குடந்தை யரனே
யலையாரு ஞால மிசையேழை யேனு

மருளுடை யின்ற துளதோ
தொலையாத சீர்மை மலிகாவை மேவு
சுடரே வெண்ணாவ லரசே. (கஎ)

அரைசேர் தரக்கி னதளும் புழைக்கை
யதளும் பணங்கொ ளரவுந்
திரைசேர் கடற்க ரளமும் வழுத்திச்
செறியுங் கொடுங்க ளலதும்
பரைசே ருடற்கண் பயின்மற் றனைத்தும்
பணுபுண் ணியங்க ளிதென
விரைசே ரறற்றண் டலவிங்கி சைக்கின்
விழைமேவ னவைக் கெளியனே. (கஅ)

எளியேனி ஞாது திருமேனி பூப்ப
வெழுநீறு மக்க மணியு
மொளியேவி ராய புலிமீதி லேற்றிங்
குலவாவு டற்பி ணியையுங்
களியேற ஞாதிப் பவப்பிணியு மோச்சுங்
கண்டப்பாடு முன்னி ஞானத்
தளியேவி ளங்கு பவவாண் டருள்க
சரணத் தடுத்த வெனையே. (கக)

எனக்கும்மெ னக்கு ளிறையா முனக்கு
மிடையாம் வினைக்கு முளவாம்
பனைக்குந் தினைக்கு முளவாய பேதப்
பகுப்போர்கி லாக்க யவனேன்
றனைக்கிங்க னைத்துந் தெரித்தே மணத்த
சரணீவ தென்று புகலாய்
வனக்குங்கு மத்தண் டடமார்பி னுண்மூன்
வருகாவை மேவு பொருளே. (உ0)

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

வேறு

பொழிசுவைக் கனியே பூசனை புரிந்த
புழைக்கையும் மதப்பெருப் பிணுக்கே

கழிபெருங் கமலக் கருவிழி யருளிக்
ககனவான் முகட்டினைக் கருதூஉந்
செழிதரு சினைவெண் குருவியின் மூலச்
செல்வமே சிறியனே னுறுந்துயம்
பழிதபுத் தருள்க பலவெனக் கிளைத்துப்
பரவுமா மறைமுதற் பொருளே. (உக)

பொருளுடை யவர்க்குப் பொருளினை யுதவல்
புண்ணிய மன்றென லோர்ந்துந்
தெருளுடை யுடைக்கே திருவருட் புரிதல்
சிறப்பதோ திருவெண் ணீறளித்தீண்
டருளுற வமைத்த வணியெயிற் காவை
யகிலநா யகிதொழுந் தேவே
மருளுறு மடியேற் குனதருள் வழங்கன்
மாண்பதோ மதித்துத வுகவே. (உஉ)

உதவுவா ருதவும் பொருளினில் வெறுப்பு
முன்கழல் பழிச்சுநர் கமலப்
பதயுக ளத்திற் படுந்துக ளதனிற்
பயிறரு விருப்புமீண் டெளியேற்
குதவுறி லஃதென் றனக்குமா லறியா
வுன்பத மளிக்குமா னணிசெய்
கதவுறு கோயிற் காவையம் பரம
கருத்தனின் கருத்தறி கிலனே. (உங)

அறிவரு மறையே யம்மறைப் பொருளே
யாகமாந் தத்துவந் தெளிவே
மறிமழு வேந்து மருவளர் மரைக்கை
வள்ளலே மதுகர மார்க்கப்
பறிதரு கொன்றை மலர்மலர் சடில
பண்ணவ னன்னருட் காவைச்
செறிவுறு பிறைநேர் மின்னாழ்க் கடவுட்
செவ்வருள் செவ்வேட் பெருமானே. (உச)

தேவரு மறியாச் சிவபரஞ் சுடரே
　　சிருட்டியர் நியமுறை பயின்ற
மூவரு மறியா முதல்வனே மூவர்
　　மொழிதமிழ்ச் சுவையுணர் முடிவே
சேவரு முனதா திருவருட் படிவச்
　　சேவையைக் காவையுட் கண்டேன்
றூவறு மெளியே னுளத்துனை யல்லாற்
　　சகத்திய லேதுங்காண் கிலனே. (உரு)

காண்டொரு முன்னைக் கவிதனும் பெளியேன்
　　கருத்தறிந் துதவுநின் மதிப்பா
ரீண்டெவ ரிளஞ்சேய்க் கறிக்கவாய்ச் சென்று
　　ளெவருனை மதித்தல ரெந்தாய்
சேண்டவழ் சோலைக் காவையங் கோயிற்
　　றெய்வமா னத்தொளிர் விளக்கே
வேண்டுதல் வேண்டா மையிலா யதனால்
　　விழைந்தவை விழைந்தவா றருளே. (உசு,

அருந்தமி ழாரூர்க் கவிஞனோ டளவி
　　லடியவர்க் கிரந்திடு சோற்று
விருந்தினை யுகவேன் பூந்தராய் வாழ்ந
　　னிருன்மண நாளள விலர்க்குத்
தருந்திரு மணத்துச் சோற்றினை விழைபித்
　　தமியனேற் கருள்செய லென்றோ
கருந்தட நெடுங்கட் கௌரிமு னேத்துங்
　　காவைவாழ் தருபெருந் தகையே. (உஎ)

தகைப்பரு மாயா தகஞ்செய்தண் டீசன்
　　றனைநிக ரன்பில னேனு
மிகைப்புரி யவன்றன் றந்தைபோ லன்பின்
　　மிகுதரு மறிவிலேன் றனக்குந்
திகைப்பற நோக்கித் திருவருள் புரிதல்
　　செவ்விதே யாமுவந் தருளக
புகைப்புல னுறுத்த முனிவர்சூழ் காவைப்
　　பதியமர் திலகமா பதியே. (உஅ)

பதித்தக மூன்றான் பரவுனர்க் கருளும்
பரமனென் றருமறை பலவும்
விதிப்பவுங் காட்டாய் வேடுவர் கோமான்
விளங்கவும் விரிதிரைப் பொன்னி
நதிப்பெரும் புனல்சூழ் நாவலி னடிக்க
ணண்ணியொண் ணதிமுடி மிலைந்த
பதிப்பொரு ளெனுநின் பதமலர்க் கன்பு
படைத்தில னுய்வதெப் படியே. (௨௯)

படியளந் தவனும் பங்கயத் தயனும்
பரமியா மென்றுவாத் தருக்கி
னடிமுடி யறியாதகழ்ந் துயர்ந் தெய்ப்ப
வழலுரு வாயவெப் பறவோ
துடியிடை மடவா டுதிப்பநீ ருருவாய்த்
துன்னிய தறிகிலேன் காவைக்
கடியவிழ் கடுக்கைத் தாமவென் மனத்தீக்
கட்டறுத் தாண்டரு ளுவந்தே. (௩௦)

கலிவிருத்தம்.

வாந்த னங்கள் வளரு மரைமலர்க்
கந்த மல்குங் கயஞ்செறி காவையுள்
வந்தி றைஞ்சிமுன் வாரணம் பெற்றபே
றெந்த நாளெளி யேற்கெய்து மீசனே. (௩௧)

ஈச னேசுர ரேத்தெழிற் காவையுள்
வாச னேமறை வாழ்த்திப் பரவுறாஉந்
தேச னேநின் றிருப்பதஞ் சிந்திக்கும்
நேச னேற்கருள் வாய்சிவ நிட்டையே. (௩௨)

நிட்டை யுற்ற நிலைச்சித்த ருகிநீ
றிட்ட மைத்த வெயிலெழிற் காவுளா
யட்ட சித்திமு றுற்றிய துண்மையே
விட்ட சித்தி யெனக்கரு ளெந்தையே. (௩௩)

எந்தை நின்கழற் கும்பினி தேத்துறாஉ
மந்த மேவு மகிழண்ட வல்லிக்குஞ்

சந்த மாலை தமிழினிற் சாற்றுநற்
சிந்தை தந்து நினைத்தொழச் செய்கவே. (௩௪)

வைய மூர்தர வாழ்வதி லென்பய
னைய னேகயா ரண்ணியத் தண்ணலே
மெய்ய னேயுன் விரைமலர்த் தாடொழச்
செய்ய வேகட னிச்சிறி யேனையே. (௩

சிறிய னேன்பிழை சித்தத் தடக்கியெம்
பொறிய வித்துனைப் போற்றுநர் நாடொறு
நெறிய னித்தெனை நித்தமுங் காத்தரு
ளறிய பூம்பொழின் ஞான தலத்தனே. (௩௬)

தலங்க ளெங்கிற் சலத்தல நாதனே
சிலந்தி முன்னருச் சிக்கமன் னாக்கிய
நலங்கண் டென்னரு ணண்ணப் பரவுமென்
மலங்க ளைந்தெனை வாழ்விக்க வேண்டுமே. (௩௭)

வேண்டு நின்னடித் தொண்டும் விழைகுநர்க்
கீண்டொன் றில்லென் றிடாவகை யீதலு
மீண்டி வண்பிற வாமெய்ப் பதவியுங்
காண்ட குஞ்சீர்க் கயாரணி யத்தனே. (௩௮)

அத்த நின்கழற் கன்புடை யாரெலாம்
பத்தி யோடுனைப் பாடலு ணர்ந்திழி
பித்த னேனும் பிதற்றுரை கேட்டரு
ளத்து லாம்வய லுவற் பதியனே (௩௯)

பதிய தாகினைப் பாடவு நான்மறை
மதியி லாமன் மறந்தவெற் கிங்கருள்
வதியு மாலயன் மற்றுள தேவருங்
கதிபெ றப்பணி காவையுள் வாசனே. (௪௦)

அறுசீர்க்கழி நெடி லாசிரிய விருத்தம்.

வாசந் தருகற் பகவாசன்
மருவும் பிரமச் சாயையற
நேசம் பெறவற் பொழுதுகு
நிரைவண் டலர்நற் றடமூழ்கிப்

பாசந் தெறவுற் றியல்வேலுன்
பதிவான் கமலத் தார்வேறோ
தேசம் பரவத் திகழ்காவைச்
செழுமா நகரத் தமர்வானே. (௪௧)

வானு ரனல்கான் மண்ணீரான்
மாமதி யென்று மெண்வகையு
மானு யலரா னன்னீரி
னுடையை யம்ட ன்றொடும்பின்
மானார் மயலா னொந்தாழ்வேன்
மால திரிந்துன் வரியளியார்
தேனார் மலர்மாண் செந்தாளிற்
சேர்தர லென்றமு தப்பரனே. (௪௨)

பரனே பரமார்த் தம்விளைவும்
பதியே நிதியே படர்கங்கா
தரனே வியனார் விண்டருவின்
றகைதேர் பொழிலார் தருகாவை
யரனே யலர்பா தம்விழையு
மவர்தா மறியாரோ முன்சந்
திரனே படியூ வம்புனலின்
செழுநீர்த் திவலைப் பெருமையையே. (௪௩)

மையார் கண்டத் திறையோனே
மலையான் மணக்கு மணவாளா
வையா வுன்ற னருளுறுதற்
கறமேன் றவமே னருச்சனையே
னெய்யா திங்கக் கதிரவன்மு
னெளியே முழுதுந் தடமுழுகி
மொய்யார் பொழிற்கா வைமருவும்
முதல்வா வெனிலோ பெறலாமே. ௪௪)

பெறுதற் கரிய பெரும்பேறும்
பெறுவார் பிறவித் தளையறவா
தெறுபற் பலது யரமாற்றிச்
சிவமாம் பெருமைச் செறிதருவார்

தறுகட் களிறு தநிஞானை
தலனார் சரணஞ் சரணமெனுக்
குறுந்ற படிவத் தொருமுனிமூழ்
குறுநீர் முழுகி யாடுநரே. (சரு)

ஆடிற் காவை யயோத்தியர்கோ
னறலாற் கொலைபா தகமறுவீர்
நாடிவெ ளோரா வதமிவர்வீர்
நான்முக னாகி யனமிவர்வீர்
தேடிக் கலுழன் மீதூர்வீர்
தீயவு லுத்தர் மீதுகவி
பாடிப் பாடி யுழல்வீரெம்
பரனா ரருளும் பெறுவீரே. (சசு)

ஈர்ந்தண் புனலான் ஞானதலத்
திலகுஞ் சம்புப் புனன்மூழ்கிற்
சேர்ந்தண் மிகுபா தகமேகுஞ்
சிவமார் முத்தி நிலைகூடுங்
கூர்ந்தீ தறியாக் கொள்கையெனோ
கோதா வரிசிந் தலைகங்கை
யார்ந்த யமுனை யென்றனியாங்
கலைந்தே யுழலு மவரவரே. (சஎ)

அவனே டவளங் கதுவாகி
யமைந்த மாயாப் பிரபஞ்ச
மெவையு நீயே யாயிலக
வெளியேன் புறம்பிங் காவேனோ
நுவமார் காவைப் பெருமானே
நல்கா யெளியேற் கெழுநாவான்
கவலா நிலைநீக் கியநீரோர்
காலுற் றுடுமொ ருவ்ரமே. (சஅ)

ஒருவா தனைமா ருதரத்தி .
னூற்றுப் பவமார் பிறவியற

வருளா லெளியே னோர்ஞ்ஞா
லறிந்தே னஃதீந் தருள்செய்வாய்
மருவார் பணிகோச் செங்கண்ணன்
வணங்கு ஞான தலத்தாருந்
தெருளா ருமையா டியசிமத்
தீர்த்தத் தன்பான் மூழ்குதலே. (சகூ)

குதலைப் பயிலோர் மதலைமுனுட்
கொளும்பாற் கடலும் வெண்டிரைவீ
சுதலைப் பெறுவா னதிமுதலேழ்
தூநதி யுங்கவுண் மதமார்தும்
பிதலைய தன்பிற் பணிகாவைப்
பிறங்கொன் பான்றீர்த் தமுநல்கு
முதலைப் பலன்யா வையுமொருவர்
மூழ்கத் தருஞ்சிவ கங்கையதே. (நூ0)

அறுசீர்க்கழி நெடி லாசிரிய விருத்தம்.

கங்கைவெண் மதிநற் றும்பை கடுக்கையுஞ் சிரத்தி லங்கச்
செங்கையொண் டழன்மான் சூலந் திகடம ருகமுந் தங்கப்
பங்குறு முமையா ளோடும் பரிந்திட பத்தி லூர்ந்தே
யிங்குவந் தருளக் காவை யீசனை வணங்காய் நெஞ்சே. (நூக)

நெஞ்சகத் தன்பி லார்தா னெறிமுறை யாற்றும் பூசை
நஞ்செனை வெறுத்து ளன்பி னற்கலாற் புடைக்கும் பூசை
யெஞ்சலின் மகிழ்விற் கொள்ளு மீசனை காவை மேவுஞ்
செஞ்சடைப் பெருமா னல்குந் திருவடி வணங்கு மாறே. (நூஉ

மாறனுக் கருளுஞ் செம்பொன் மலைப்பொருள் விரும்ப லில்லே
னேறெனப் புவியை யாண்டெண் டிருந்திட விரும்ப லில்லே
வீறணி சுவர்க்கத் தார்தம் விளைநலம் விரும்பே னின்றாட்
சோறதே விழைவே னல்ல வருண்மிகுங் காவை வாழ்வே. (நூ

வாழ்த்துனர் வாழ்த்த யானோ வஞ்சமிகப் புரிவ னேனும்
தாழ்த்துளைப் பித்த னென்றுக் காற்றுபத் தன்மை தேர்
சூழ்த்தறு காற்புள் ளுறைந்து னோலையும் காவை நாத [வே
பாழ்த்தவென் பிறப்பு முற்றுன் பதந்தரத் தகுதி யானே. (

நாளும்வெண் ணீறுபூசி நயனநன் மணியும் பூண்டு
நீளுகல் லாடை போர்த்து நினதடி யவரி னஞ்சாக்
கோளுறு வஞ்ச வேடங் கொண்டிழி தொழிற்செய் வேனுன்
றாளுற லென்றோ ஞானத் தலத்துறை தருமெம் மானே. ௫௫

மானன விழியார் மையல் வலைப்படிந் தவர டித்தொண்
டானவை புரிவே னுன்ற னடியர்தொண் டியற்ற கில்லே
னீனமா ரெளியே னின்று னிணையடி நினைவுற் றோவா
மோனமார்ந் திருக்கை யென்றோ மொழியறு தேசத்தேவே. ()

தேவர்தம் வாழ்க்கை முற்றுந் திரும்பவும் பிறவிக் கேதென்
றோவயி னவைவெ றுத்து னலரடி விழைந்து நின்றேன்
பாவணி படரைச் சோதிப் பவனலை யென்றிங் கோர்ந்தே
யாவலி னனைத்தேன் காவை யமுதநின் குறிப்பிங் கென்றோ. (௫௭)

குறிப்பறிந் தருளா யேனுங் குன்றயிரந் தகழு மூக்கந்
திறப்படப் புரியு மெற்குன் றிருவருள் சுரவா தென்னோ
விறப்பவு மிரப்பார்க் கில்லை யென்பவ ரீனு ரொன்று
முறையபொரு ளுணர்ந்த காவை முயங்கருட் படிவக்கோவே. ()

கோடியாம் வெறுக்கை நேடிக் கோதையர் மக்க ளின்ப
கீடின ரெனினு மின்று ணிலையறிந் தேத்தா ரன்றோ
நாடியற் சினைய நாவ ளுதவொண் ணிதிய முற்றும்
வீடின ராகி மேலை வீரிநர காட்சி பூண்டோர். (௫௯)

பூண்பல பூண்டு மெய்யிற் பொற்படாம் போர்த்து நாளுங்
காண்பல மாதர் மெச்சக் காளையாய்த் திரிவே னல்லாற்
சேண்பயி லுவன் மூலச் சிவபராஞ் சுடரே நின்றுண்
மாண்பொடு பணிந்துன் கோயில் வலம்வர முயல்கி லேனே. (௬௦)

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

முயன்றன்பிற் பரவடியார்க் கெளிய னென்று
முழங்குமறை புண்ணியப்பர் நீதி யாரன்
பியன்றிடத் தேறின்றேட் சொரு னைக்கட்
டெளிமையிற்று மூறவெய்ர்த்துன் றுட்க னன்பு

குயின்றனனின் குறிப்பறியேன் குறிக்கொ ளுவெண்
குணக்குன்றே ஞானதலக் கோவே யென்பாற்
பயின்றுளவைம் பாசமறுத் தருட்க டைக்கண்
பார்த்தருணின் பதம்பெறவிப் பாரின் மீதே. (௬௧)

பாராதி யண்டபகி ரண்ட முற்றும்
பரந்தெனைத்துந் தானாய பரனே மெய்ம்மைச்
சீராரு மணிமயவி மானத் தோங்குஞ்
சிற்பரனே சேதியர்கோ னன்பிங் கோர்ந்தும்
போராரும் வஞ்சகனைப் படவிட் டாற்போல்
போற்றுமெனைக் கைவிடா தெனைப்ப கைக்கு
நேராரைத் தவிர்த்தெளியேற் கருள்க நின்று
ணிழன்மருவிச் சிவானந்த நீடு மாறே. (௬௨)

ஆறேறு மணிமுடிகொ ளரனே நாவ
லடியமரும் பெருமானே யடர்க்கும் வீரப்
பாறேறு மேறேறும் பரனே கொன்றைப்
பைந்தருநின் னுருக்காட்டப் பரவா னயன்
வீறேறு மன்பினில்யா னொருகூ றெய்த
விழைந்தருளி லென்பாற்கூற் றுவன்மே வானுற்
பேறேறு மொருசிறுவன் பான்முன் போந்து
பெற்றவுதைத் தழும்புடலிற் பிறங்க லானே. (௬௩)

பிறங்குமுளத் தன்பினெடும் பரவி நின்றுட்
பேறுபெறு மதமாவாய்ப் பிறக்கி லேன்மஞ்
சுறங்குசிகைக் குன்றெனவந் தெதிர்த்த வஞ்ச
வும்பலெனப் பிறக்கினுநின் னுருக்க ணுர்வன்
கறங்குதிரைக் கடலகட்டிவ் விருவ கைத்தாங்
காரியக்கு மிடமிலனு யுழல்வே னென்றுந்
திறங்குலவு மலரடிக்காட் படுவ தெந்தாய்
தென்காவைப் பதியமருந் தேவ தேவே. (௬௪)

தேவர்கோ னுளுற் றுகொடுஞ் செய்த புத்தா
டிருவருட்பாங் கறிந்துன்றுக் கடிகைம பூண்டேற்

பூவருபங் கயன்கரத்தும் பங்க யன்றன்
புதல்வன்றன் கரத்துமினிப் புகிலிப் பூவி
லேவருக்கும் பெருநகைப்பிற் கிடமன் றோவவ்
வெண்மையெவர் பாற்றெனநன் கெண்ணி யேனுஞ்
சேவ்றுநின் றுள்பெறுமா றருள்வாய் காவைச்
செழுநகரி னமர்ந்திலகுஞ் சிவபி ரானே (௬௫)

சிவமயமிவ் வுலகசர சரம தென்னாத்
தேரேனம் புலநெறிச்செல் லகம டக்குந்
தவமிலேன் குருமுதன்முப் பொருளோர் கில்லேன்
றனதுவாந் தன்மையொரு சிறிது மோரேன்
உவர்மேனி யீரங்கொல் லியனைக் கண்டன்
றன்னடிய னெனப்பரவு மடிச்சே ரன்பக்
குவமிலே னருட்பெறுமா றென்னோ காவைக்
குருமணிமா னத்தமருங் குணப்பொற் குன்றே. (௬௬)

குன்றெடுத்தோன் னிளாபுரந்தோன் விழிபெ யர்த்துன்
கோகனகத் தாட்கணியக் குலவு மாழி
யன்றுதவு வண்மையைக்கண் டின்ற டுத்தேற்
கன்பினருட் செயாதெனகி லாண்ட வல்லி
யொன்றினளோர் பான்மற்றோர் பான்மா னின்று
னுன்றனக்கே திடமென்பா லில்லை யென்னி
லென்றெனக்காப் பொய்ம்மொழியேன் சராச ரங்க
ளெல்லாநின் வயிறெனுங்கு மியல்கண் டேனே. (௬௭)

கண்டெழிற்காஞ் சியிலன்பும் பொருளு நேர்ந்து
காடவர்தங் கோமானு நின்னை யூரி
லெண்டகுபா வனையொன்றாற் பூச லாரு
மெடுத்தசிவா லயங்கடமி னினைத்தா பிக்கக்
கொண்டசுப நாளொன்றாக் கூடப் பின்னாட்
கொள்கெனக்கா டவர்க்குநவில் குறிப்பிங் கோரிற்
றிண்டிறல்சே ரந்நெறிகொண் டுய்வேன் காவைச்
சிலந்திநாற் றனியவது தேர்கி லேனே. (௬௮)

தேர்ந்தகய வாயரல வாய வாய்முன்
சென்றமிழ்த்திஞ் சயமருளாற் சித்திக் கப்பெற்

றூர்ந்தவலி யான்பெயரு நின்றாட் பேறு
மங்குறவு மையறவோ டொன்றை யோருங்
கூர்ந்தபகுத் தறிவுமுறு பொருளே ரியாக்கை
கொண்டுமுனைப் பரவலிலாக் கொடியே னின்றாட்
சார்ந்துசுகா தீதநிலை மருவ லெங்ஙன்
றவஞான தலத்தமுதே சாற்று வாயே. (சுக)

சாற்றும லொருநால்வர்க் கன்று லின்கீழ்ச்
சாற்றியகைக் காட்டறியேன் றமிழ்வே தத்தி
னூற்றுரு மொழிஞல்வ ரிரண்டற் றொன்று
யுற்றிலகு மத்துவித முத்தி தேரே
னேற்றூர்நின் சந்தான மரபுற் றோங்கு
மெழிற்குரவ ரார்ந்தநல மீதென் றோரேன்
கூற்றூர்ந்த வுமைபரவக் காவை மேவுங்
குழைகழற்று ணிழலெவணங் குறுகுவேனே. (எ0)

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

கூட கன்ற புள்ளொ ளுக்கு லாவு மெய்யி னுயிர்நிலை
நாட கன்ற வொள்ள றிவி னுயி னேனு மளிமுரா
லேட கன்ற வங்க ழற்க ணேயு மாறென் காவிரி
யூட கன்ற நற்ற ளிக்க ணோங்கி வாழு மீசனே. (எக)

ஈச னேசு ரேச னேத்து மிறைவ னேவெண் ணாவல்வாழ்
நேச னேநற் றிரிப தார்த்த நிலையி தாமென் றோர்கிலாப்
பாச னேனை மபாச முமப ரித்தி யாக மாய்விசு
வாச நேசம் வாய்ந்து னைவ ணங்கு மாறு செய்கவே. (எஉ)

செயற்க ருஞ்செ யற்ப ரிந்து செய்வ ரற்பெ ரியரென்
னியற்ப ரூஉக்கை மாவு ரித்தெ டுத்த வாற்ற றேற்றவுங்
கயற்க ணூர்ம யற்ப டிந்தொர் காது நின்க ழற்றொழு
துயற்கெ னக்கொர் வுறைப ணிக்க வுற்ற காவை யத்தனே.
அத்த விப்பி றப்பில் யானி னடிகள் தாளு மருவிலே
னொத்த வேத நாவன் மன்னி லுயாவெ னுவன் முயலகன்
மைத்த மேனி பரவ வாவிற் படியெ னுப்பிறக்கிலேன்
எத்த னையு முயல்வி லாது னடியி னைக்க ணுய்கவே. (எச)

உய்ய வுண்ட நஞ்ச மின்று ணர்த்த நின்ன ருட்டிறம்
பொய்யி கந்த திற்றெ ழுந்து போகு மூழ்ப்பு ணர்ப்பினுன்
மெய்ய கன்று மாண்டு மாண்டு மீண்டி லண்பி றக்குறாஉம்
வெய்ய வான வர்ப்ப ராவும் வீணவென்ற சொல் பெறுவரே. (௭௬)

பெற்ற மாய மாயன் முன்பி றங்க லாய்ப்பி றங்குநாள்
சற்று நோக்கு ருவ டிக்கண் டன்க ணிட்ட வாறுபற்
றற்ற வர்க்க ருள்வன் கர்வை யண்ண லென்று ணர்த்தவும்
மற்றொர் பற்றி னேனும் வாழ்த்தும் வாழ்த்தி லென்ப யப்பதே.

பற்றி லார்க்க ருள்வ னுவற் பதிய னென்னு மறைமொழி
வெற்றெ னவு ணர்ந்த னன்வி ளங்கு நூவ லூரனுக்
கொற்ற னுயு வந்து தூது [illegible]ரைத்தி யைத்த வுண்மையா
விற்றை நாளு னேவ லாக வெனையி யக்கிற் சாலுமே. (௭௭)

சால நீள்வ யற்சு லாவு சம்பு கேச வெங்கணும்
பாலி னீரின் விரவி நின்னின் பரிசு காண்கை யொன்றுமற்
றுலி சூழ்பு விக்க ணன்னை யான றிந்தி ருத்தலொன்
றேலி ரண்டி லொன்றை யானு மெய்த லிங்ங னருள்வே. (௭௮)

அருமறைக்கு லஞ்சொல் காவை யாத்த தூல சூக்குமக்
கருவி யென்னு மும்மை யாக்கை யிற்ப டிந்தும் படிவிலா
தொருவில் கால மூன்றி னின்று முனைய கக்கு றுதவென்
னுருவை யானு முணரு மாறிங் குனத ருட்பு ரிகவே. (௭௯)

புரியு நின்ன டித்தொ ழும்பு பூண்ட வென்முன் வெற்புநே
ரெரிவி ழிக்க ருப்ப கட்டி னியமன் வந்தெ திர்ந்தநா [ன்
ளரிவி டைக்க ணூர்ந்த வண்வந் தருள்சு ரத்தல் வேண்டினே
விரிம லர்ப்பொ தும்பர் மேய வெள்ளை நாவல் வள்ளலே. ()

கலிவிருத்தம்.

வள்ளமலர் வாவிமத வாரண வனத்தோ
ரொள்ளிடைய வன்பினடி யேத்தினர்க ளன்றே
விள்ளருமெய்ஞ் ஞானநிலை மேவியவ னூர்கைப்
புள்ளினிவர் ந்தசிவ போகநுகர் வாரே. (௮௧)

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
TIRUVANMIYUR. MADRAS-41.

ஆரமல ராரணணி யார்மலைவி யாரஞ்
சோரவலை நித்திலது துன்னுமின் முடிக்க
ணூரலெவன் காவைநக ரார்ந்தவு னடிக்கீழ்ச்
சாரவரு ணல்குகத யாவினெளி யற்கே. (௮௨)

எட்டிணைய வேனுமிர வரவகையு மேற்பார்க்
கிட்டுநுகர் தேட்டமுமி லங்கடியர் தொண்டு
முட்டுதையு மன்பினொடு முன்புகழ்ந வில்சொற்
கட்டுமிக நல்குகக யாரணிய வாழ்வே. (௮௩)

வாரணவ னத்தவிர்வ னத்துருவ வெந்தர்
யாரணமெ னைத்துமகி லாண்டமும்விராய
பூரணனெ னுஞ்சொலுறு போதமது ணர்ந்துங்
காரணமெ னேவுலகர் கண்டுபர வற்கே. (௮௪)

பரசமய மேவு மவர் பாரிலனி மூசும்
சுரசமய நாவனிழ நுன்னுபுவு லாதைக்
கரசமய நல்குமமு தேசனரு ளோரில்
வரசமய சைவதவ வாழ்வையிக வாரே. (௮௫)

இகமிலகு தியவுட லீரவெனி னெஞ்ச
மிகமறுகு முன்னருறு மேல்வினையி னந்தோ
வகமய லகன்றுனடி யார்ந்தருண் மெய்ஞ் ஞானச்
சுகமருவு மாறருள்க தோயவுரு வோனே. (௮௬)

உருவமொரு நான்கருவ நான்குபய மொன்றாய்
மருவுநவ மார்வடிவ மன்னியும தும்
பொருவில்பொரு ளாய்நிறைபு னற்படிவ நாத
குருவடிவ மேவியொரு கூற்றருள்வ தென்றே. (௮௭)

என்றுபணிந் தேத்துமமு தேசபடர் கோட்டுக்
குன்றுறழ்ப கட்டினிவர் கூற்றனெனை மேவி
லன்றுவிடை யேறியெனை யாளுமுமை யாளோ
டொன்றுற வெதிர்ந்தருள்க வுள்ளுமெளி யற்கே. ()

உள்ளியிடு கந்தமென வோதுமய லோரவா
தெள்ளிருவி னைக்குளுழல் வீரிலகு செங்கட்

கிள்ளியிடு மாலயகி லாலயநின் வெண்ணீ
றள்ளியிட வவ்வினைய கன்றொளிர்கு வீரே. (அகூ)

ஒள்ளொளியெ ளுவெளிய னுள்ளமலர் மேய
வெள்ளியந ளுவலடி மேவமுத வள்ளால்
தெள்ளுசிவ ஞானநிலை தேறவிழை வேனுக்
குள்ளநெறி யுள்ளபடி யுள்ளுற வுணர்த்தே. (கூ௦)

எழுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

உறுபெரு நாரமோடு பிறைநீடு கொன்றை
யொளிரிண்டை மோலி சரணம்
மறுவறு வேதமோல மொடுநாடு கஞ்ச
மலராந நேச சரணம்
இறுதிகொண் மாலயன்றன் சிரமாலை கொண்ட
வெழிலாரு மார்ப சரணம்
நறுமலர் நாவணிமு லமுதேச மால்க
ணணிமல்கு பாத சரணம். (கூக)

சரவச ரங்களாய பிரபஞ்ச முற்றுந்
தாளு மளுதி சரணம்
கரவச மேயசம்பு முநிநல்கு நாவல்
கனியுண்ட வண்ட சரணம்
பரவச நார்த்தநன்மா பழிநீக்கு காவை
பரநாத தத்வ சரணம்
உரவச னத்தகோத மன்விரக தாப
மொழிவித்த நம்ப சரணம். (கூஉ)

நம்பகி லாண்ட வல்லி கொளமுன் னவிற்று
ஞானேபை தேச சரணம்
கம்பலை நீடுகங்கை யினுங்கா விரிக்குக்
கனநல்கு நாத சரணம்
பும்பெழு சாகரங்க டிசைநான்கு மல்கி
பரவப் புலிங்க சரணம்
வம்பவிழ் மேருவாவி நதியாகு மாறு
வரநல்கு மப்ப சரணம். (கூங)

அப்பிறை பாரியாடோ ளணைவன்னி சாப
மகல்வித்த தேவ சரணம்
ஒப்பறு நேரியானில் லவள் சூடமார
மொளிருத்த மாங்க சரணம்
செப்புச ரோருகன்ஸ்ரீ வினைநீக்கி யாக்குந்
திறநல்கு மூர்த்தி சரணம்
மைப்புரு கூதனைத்த வடர்பிரம பாவ
மாற்றும்ப ரும்ப சரணம் (கச)

உம்பல்செய் பூசையேற்றன் றுவந்தாண்டு கொண்ட
வுயர்ஞான தேச சரணம்
பைம்புன னீடியோடு பொருனைக்கண் முத்தம்
பாலித்த வீச சரணம்
அம்புயை யாடரங்க நெடுமால் வணங்க
வருள்கருணை வாரி சரணம்
நம்புறு பானுபோற்ற வொளியாதி நல்கு
நறுநாவன் மூல சரணம். (கரு)

சந்திரன் வாழ்த்திடமன் றருசாப மாற
சரண்புக்க சரண சரணம்
சுந்தர நாகமேவு மயன்செய்வி மானத்
தொடர்புற்ற வாதி சரணம்
வந்தர நாதமோடு பணிவீட ணற்கு
வரநல்கு மமுத சரணம்
முந்தர ஞரினேமி சமனுகை கும்ப
முநிபரவு மொருவ சரணம் (கசா)

பரவியி ராவணேசன் றனைவீட்டி ராமன்
பழிநீக்கு மிறைவ சரணம்
விரவியு லூதைவாயி னுறுதந்தி றுற்று
வியன்கோயின் மேய சரணம்
திரவிய மின்றிநீற்றி னெயில்கட்டு வித்த
சித்தப்பிர சித்த சரணம்

உரவிய நீர்த்தலைவீப்பென் றுயர்தீர்த்த முற்று
மொளிர்தீர்த்த மேனி சரணம். (௯௭)

திருமலர் வாசனுற்றுச் சவங்கொண் டுவந்த
சிவஞான தான சரணம்
மருவுப ராசரன்றன் வழிபாடு கண்டு
வஃதீந்த வரத சரணம்
நிருதிப ராவிபச்சாத் தாபேச னென்ன
நிறுவித்த வெந்தை சரணம்
வருமொரு வீடணன்வற் சரந்தோ றிறைஞ்ச
வளர்தோய நாத சரணம். (௯௮)

வடதிசை மன்னவன்புட் பகநாடி யேத்த
வரமீந்த நித்த சரணம்
படருபு நந்திகேட்ப நகர்மேன்மை முற்றும்
பகருநந் தீச சரணம்
திடமுறு மாதிசைவ மறையோர் செருக்கைச்
சிதைவித்த வார்த்த சரணம்
விடலரு மூர்த்திதீர்த் தந்தலமூன்று மோங்கு
வியன்ஞான வைப்ப சரணம். (௯௯)

சரதம தாகபாகி ரதிநோற்றி வர்ந்த
தழைசடா டவிய சரணம்
விரதர்கண் மூழ்குமொன்பான் றடம்வாய்ந் திலங்கு
விரிநீர்த் தலத்த சரணம்
வரதவ னீடுசென்னி யதுகீண் டுயர்ந்த
வளநாவ லேச சரணம்
பரவுறு மெளியனேற்கின் கருண்மாரி தூற்றும்
ப்ரியகா ரணைய சரணம். (௧௦௦)

திருவானைக்காப் பதிற்றுப்பத்தந்தாதி.

முற்றிற்று.

MAHAMAHOPADHYAYA.
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY.
TIRUVANMIYUR. MADRAS

விளம்பரம்.

இப்புத்தகமும் இந்நூலாசிரியரால் தமிழில் வசன நடையாக வெழுதப்பட்ட காந்திமதி யென்னும் புத்தகமும் வேண்டியவர்கள், இந்நூலாசிரியரிடத்திலும், சென்னை தொண்டைமண்டலம் ஐஸ்கூல் தமிழ்த் தலைமைப்பண்டிதர் திரு. வி. சிவப்பிரகாசையரவர்களிடத்திலும், முத்தியால்பேட்டை தம்புசெட்டிவீதி 289-வது நெம்பர் ம-ா-ா-ஸ்ரீ, வெ. புஷ்பரதச்செட்டி அண்டு கம்பெனியாரிடத்திலும் அடியிற்கண்டபடி விலைகொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

விலை.

திருவானைக்காப் பதிற்றுப்பத்தந்தாதி	0—1—6.
காந்திமதி	0—8—0

சோதனைப்பத்திரம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்.
12	22	பலையான்	பலையாண்
19	4	வீணையென்ற	வீணைரென்
,,	11	தாதுறு	தாது
21	7	எழு	என